தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.

(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்),

தொலைபேசி: 044-29515590


**ஆணை நாள் 01.07.2026**

**முன்னிலை**

**திரு அ. விஜயராம், எம்.ஏ., பி.எல்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 16983/H/2024**

திரு க.மாரீஸ்வரன் — மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
உதவி ஆணையர்
சிவகாசி மாநகராட்சி அலுவலகம் — பொது அதிகார அமைப்பு
சிவகாசி மாநகராட்சி
விருதுநகர் மாவட்டம்.

கோரிய தகவல்: மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 12.11.2024 அன்று தாக்கல் செய்துள்ள மனுவில் சிவகாசி மாநகராட்சி அலுவலகத்தில் உயர் பொறுப்பில் பணிபுரியும் பணியாளர் பெயர், அவர் வகிக்கும் பதவி, அவர் வாங்கும் சம்பளம் மற்றும் கடைநிலை வரை உள்ள ஒவ்வொரு பணியாளர்களின் பெயரும் அவர்கள் வகிக்கும் பதவியின் பெயரும், அவர் வாங்கும் சம்பளம் பற்றிய தகவல்கள் வழங்கக் கோரி மொத்தம் 7 இனங்களில் மனு தாக்கல் செய்துள்ளார். பொதுத் தகவல் அலுவலரால் தகவல்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து, மேல்முறையீட்டாளரால் 26.12.2024 அன்று தாக்கல் செய்யப்பட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவானது இன்று (01.07.2026) இவ்வாணையத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளர் | திரு க.மாரீஸ்வரன் இன்று விசாரணைக்கு ஆஜரானார். |
| பொதுத் தகவல் அலுவலர் | பொதுத் தகவல் அலுவலர் திருமதி. அ. வரலட்சுமி, உதவி ஆணையாளர், சிவகாசி அவர்கள் விசாரணைக்கு நேரில் ஆஜரானார். |

ஆணை

இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மேல்முறையீட்டாளர் குறிப்பிட்டுள்ள இனங்களுக்கு ந.க.எண்.7836/2024/சி1, நாள்.06.01.2025 தேதியிட்டக் கடிதத்தின் வாயிலாக தகவல்கள் வழங்கியுள்ளதாகத் தெரிவித்து அதற்குண்டான ஆவண நகலினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

2. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர் 12.11.2024 அன்று தான் அனுப்பிய மனுவினை வாங்காமல் தனக்கே திருப்பி அனுப்பி விட்டனர் என தனது வாதத்தை எடுத்துரைத்தார்.

3. இன்றைய விசாரணையின் முடிவில், இரு தரப்பு வாதங்கள் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில் கீழ்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

- பொது தகவல் அலுவலர் அவர்கள் மனுதாரரின் 6(1)ன் கீழ் தாக்கல் செய்த மனுவிற்கு தகவல்கள் வழங்கவில்லை என்பதையும், மேல்முறையீட்டாளர், மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்த பின்பு, 06.01.2025 தேதியிட்டக் கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கியுள்ளதையும் இவ்வாணையம் பதிவு செய்கிறது.

- பொது தகவல் அலுவலர் 2 மாதங்கள் கடந்து காலதாமதமாக தகவல்கள் வழங்கியிருந்தபோதிலும், மனுதாரர் அளவுக்கு அதிகமாக தகவல்கள் கோரியிருந்த நிலையிலும் அனைத்து இனங்களுக்கும் முழுமையான தகவல்களை வழங்கியுள்ளதை இவ்வாணையம் பதிவு செய்கிறது. மேலும், சட்டப்பிரிவு 7ன்படி மனுதாரரின் சட்டப்பிரிவு 6(1)ன் கீழ் விண்ணப்பத்தை பெற்ற பொது தகவல் அலுவலர் அவர்கள் 30 தினங்களுக்குள் மனுதாரர் கேட்டுள்ள தகவல்களை முழுமையாக தரக் கடமைப்பட்டவராவார். இந்நிலையில் அப்போதைய பொது தகவல் அலுவலர் ஏன் 30 தினங்களுக்குள் தகவலை மனுதாரருக்கு வழங்க தவறினார் என்பதற்கும், காலதாமதமாக தகவல் ஏன் அளிக்கப்பட்டது என்பதற்கும் அப்போதைய பொது தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 20(1)ன்கீழ் அதிகபட்ச

தண்டமாக ரூ.25,000/- ஏன் விதிக்கக் கூடாது என்பதற்கும் அவரது எழுத்து மூலமான விளக்கங்களை அவரிடமிருந்து இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் பெற்று இவ்வாணையத்திற்கு 04.08.2026 அன்று நேரிடையாக சமர்ப்பிக்குமாறு இன்றைய பொது தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்திரவிடுகிறது.

- 12.11.2024 அன்று மனுதாரர் அனுப்பிய மனுவினை திருப்பி அனுப்பியதற்கான காரணத்தை, அப்போதைய பொது தகவல் அலுவலரிடமிருந்து அவரது எழுத்து மூலமான விளக்கங்களை பெற்று இவ்வாணையத்திற்கு 04.08.2026 அன்று நேரிடையாக சமர்ப்பிக்குமாறு இன்றைய பொது தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்திரவிடுகிறது.

- தவறும்பட்சத்தில் முன்னாள்/இந்நாள் பொதுத் தகவல் அலுவலர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 சட்டப்பிரிவு 20(1)-ன் கீழ் ரூ.25,000/- அபராதம் விதிக்கவும், சட்டப்பிரிவு 20(2)-ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் மற்றும் 19(8)(b)-ன்படி மேல்முறையீட்டு இழப்பீடு வழங்குதல் போன்ற தண்டனை நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கவும் நேரிடும் என்று பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

ஒம்/- (அ. விஜயராம்)
மாநில தகவல் ஆணையர்

//ஆணையத்தின் ஆணைப்படி//

உதவிப் பதிவாளர்

**வழக்கு எண். SA 16983/H/2024**

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

**பொதுத் தகவல் அலுவலர்/**
**உதவி ஆணையர்**
**சிவகாசி மாநகராட்சி அலுவலகம்**
**சிவகாசி மாநகராட்சி**
**விருதுநகர் மாவட்டம்.**

**மேல்முறையீட்டாளர்**

**திரு க.மாரீஸ்வரன்**
**த/பெ.செ.கந்தவேல் நாடார்**
**கதவு எண்.463/ப 259 பாண்டியன் நகர் ஆறாவது தெரு**
**அன்னை இந்திரா காந்தி நகர்**
**திருத்தங்கள் நகரம் 626 130.**
**சிவகாசி மாநகராட்சி**
**விருதுநகர் மாவட்டம்**
**தொலைபேசி - 9976275636.**

**Copy to : File**

**VM/PA**